**One-day National Workshop on**
**Selection of Topics for B.E., M.E. & Ph.D. Projects in Civil Engineering**
**on 24.07.2015**

# பொறியியல் ஆராய்ச்சிப் படிப்புக்கான தேசியக் கருத்தரங்கு

**சத்தியமங்கலம், ஜூலை 24:** பண்ணாரி அம்மன் பொறியியல் கல்லூரியில் ஆராய்ச்சிப் படிப்புக்கான தேசியக் கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கிற்கான விழா மலரை கல்லூரி முதல்வர் த.சரவணன் வெளியிட அதை கட்டடவியல் துறைத் தலைவர் ஜி.அனுஷா பெற்றுக் கொண்டனர்.

பயிற்சிப் பட்டறை, திட்டவரைவு, புதிய கண்டுபிடிப்புகள் போன்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்த மாணவர்கள் தங்களது ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்தினர்.

இதில், 125 ஆராய்ச்சி மாணவர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் அருண், ந.அருணாச்சலம் ஆகியோர் செய்திருந்தனர்.




தேசியக் கருத்தரங்கு விழா மலரை முதல்வர் த.சரவணன் வெளியிட அதைப் பெற்றுக் கொள்கிறார் கட்டடவியல் துறைத் தலைவர் ஜி.அனுஷா.